செ. கு. எண்: 045 நாள்: 21.03.2019

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 21.3.2019

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கனகராஜ் அவர்கள் இன்று காலை (21.3.2019) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மன வேதனையும், பெரும் துயரமும் அடைந்தேன்.

சூலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக திறம்பட பணியாற்றிய திரு. கனகராஜ் அவர்கள் பல ஆண்டுகளாக பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். மக்களின் நலன்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தொகுதி மக்களிடம் நெருங்கிய நட்பு கொண்டவர். அனைவரிடமும் விருப்பு, வெறுப்பின்றி அன்புடன் பழகும் பண்பாளர். தொகுதி வளர்ச்சிகாக அரும்பாடுபட்டவர். தொகுதி மக்களின் பேரன்பைப் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர். திரு. கனகராஜ் அவர்களின் மறைவு கோயம்புத்தூர் மாவட்ட மக்களுக்கு, குறிப்பாக சூலூர் தொகுதி மக்களுக்கு பேரிழப்பாகும்.

திரு. கனகராஜ் அவர்களை இழந்து வாடும் அவரது மனைவிக்கும், குடும்பத்தினருக்கும், அவரது தொண்டர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கனகராஜ் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9